மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம்

*794 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கள்ளக்குறிச்சி தாலுக்காவிலுள்ள அசகளத்தூர் அருகே ஓடும் மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தைகள்.

*795 வினா : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 8—12—1971 அன்று பேரவையில் 158 எண்ணுள்ள கேள்வியை ஒட்டிய துணைக் கேள்விக்கு அளிக்கப்பட்ட விடையின் தொடர்பாக மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தையை 1970–71-ல் ஏலம் எடுத்தவர் கட்ட வேண்டிய பாக்கித் தொகையை வசூலிக்க கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதா?

(இ) மொத்தம் எவ்வளவு தொகைக்கு எந்தத் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது ?

(உ) தொகை உடனடியாக வசூலிக்க உடன் ஐப்திக்குக் கோரப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. ஏனெனில் ஏலதார் பாக்கித் தொகை முழுவதையும், மேலும் அபராதத் தொகை வட்டித் தொகை முழுவதையும் கட்டிவிட்டார் என்று மாவட்ட ஆட்சியாளர் இப்போது அறிவித்துள்ளார்.

(இ) (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே நான் முன்பொருமுறை வினாவை எழுப்பிய நேரத்தில் கோர்ட்டிலே இருக்கிறது என்ற தகவலைக் கொடுத்தார்கள். இப்போழுது இல்லை யென்ற பதில் வந்திருக்கிறது. நாளை என்ன பதில் வருமோ ? இப்படித் தவரான தகவல்களை இந்த மாமன்றத்திற்குத் தருவதைப் பற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பு சொன்ன பதில், இரும்பூதிப் பட்டியிலுள்ள சந்தை ரூ. 32,101வுக்கும், கொசூரிலுள்ள சந்தை ரூ. 13,001-வுக்கும் ஏலம் விடப்பட்டன. இரும்பூதிப் பட்டி சந்தைக்காக செலுத்தப்

பட்ட தொகை ரூ 8,036 ஆகவே, இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 24,065 கொசூர் சந்தைக்காக செலுத்தப்பட்ட தொகை ரூ. 3,254. ஆகவே இன்னும் செலுத்தப்படவேண்டிய தொகை ரூ. 9,747. . பாக்கித் தொகைகளை குத்தகைதாரிடமிருந்து நீதிமன்றத்தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆகவே, நடவடிக்கை எடுப்பதற்குள்ளாக முழுத்தொகையையும் கட்டி யிருப்பதால், வட்டியையும் சேர்த்துக் கட்டியிருப்பதால் மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதை வசூலிக்காமல் இருந்த அதிகாரிகள் யார் யார் என்று அறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாவட் ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே பல குறைபாடுகள் இருப்பதாக நான் இந்த மாமன்றத்தில் பல வினாக்களை எழுப்பியிருக்கிறேன். அதிலே இதுவும் ஒன்றுதான். அப்பொழுது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் பதில் அனுப்பியுள்ளதாக கூறியிருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது இது போன்ற மாமன்றத் றத்திற்கு உரிய பதிலை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே அவர்கள் உரிய தகவலைத்தான் தருகிறார்கள், நாங்களும் உரிய பதிலைத் தான் தருகிறோம். அதிலே மாறுபாடு, குறைபாடு இருந்தால் சுட்டிக் காட்டலாம். பாக்கித் தொகைகளை குத்தகைக்காரரிடமிருந்து நீதிமன்றத் தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்திருந்தார். அந்த வகையிலேதான் அந்தப் பதில் அளிக்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பாக்கித் தொகைகள் பூராவும் பெற்றுவிட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். பாக்கித் தொகைகளைப் பெற்ற காரணத்தினால் கோர்ட்டில் இருக்கும் கேஸ் வாபஸ் வாங்கப்பட்டதா அல்லது அந்தத் தொகைக்கு எந்தக் கேசும் போடப்படவில்லையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளர் இத் தொகைகளை நீதிமன்றத்தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பெறுகிறது என்று அப்பொழுது கூறிய பொழுதிலும், ஏலத் தொகை முழுவதும், 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் ஏலதார் கட்டியுள்ளார், மீதியுள்ள அபராத வட்டித் தொகை முழுவதையும் பின்னால் கட்டியுள்ளார், ஆகவே கோர்ட்டுக்கு இனிமேல் போக வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.